# இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி
(சார்பு நீதிமன்றம், சங்ககிரி)

முன்னிலை : திரு. N. பன்னீர்செல்வம், B.A., B.L.,
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், சித்திரைத்திங்கள் 17 ம் நாள் வியாழக்கிழமை
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ம் நாள் வியாழக்கிழமை

இ.வி.கோ.ம.எண். 478/2013
CNR No: TNSA07-000488-2013

ரங்கசாமி, த/பெ. பெருமாள் ரெட்டி, வயது 58,
வசிப்பிடம் 23 A, கோனேரிப்பட்டி, புது ரெட்டியூர்,
இடங்கணசாலை அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.

..மனுதாரர்

/எதிராக/

கண்ணன், த/பெ. தங்கவேல், வசிப்பிடம் 4/15 C,
சின்னப்பம்பட்டி, வெள்ளாளபுரம் கிராமம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம். ..எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 16.04.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் வருகையின்மையினால் அவர் தோன்றாத்தரப்பினரராக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், மேற்படி மனுதாரர் தரப்பை கேட்டும், இதுநாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இம்மனுவில் இந்த தீர்ப்பாயம் பிறப்பிக்கும்:

<u>உத்தரவு:-</u>

1) இம்மனுவானது மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்மனுதாரர் 8 லட்சம் ரூபாய் இழப்பீடு கொடுக்க உத்தரவிடக் கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதி 3ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்:</u>

கடந்த 11.02.2013 ஆம் தேதியன்று காலை 10.00 மணியளவில் TN 28 X 8915 என்ற பதிவெண் கொண்ட TVS 50 என்ற இரு சக்கர வாகனத்தை மனுதாரரின் மகன் ஓட்ட, பின்னால் மனுதாரர் ரங்கசாமி அமர்ந்து கொண்டு, இளம்பிள்ளை - சின்னப்பம்பட்டி மெயின் ரோட்டில் பாப்பாபட்டி பெட்ரோல் பங்க் அருகே மேற்படி சாலையின் இடதுபுற ஓரமாக சாலை விதிகளை அனுசரித்து சென்றுக்கொண்டிருந்தபோது, மனுதாரருக்கு பின்னால் அதே திசையில் வந்த TN 52 A 3055 என்ற பதிவெண் கொண்ட TVS Super XL வாகனத்தை ஓட்டி

வந்த ஓட்டுநர் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி மனுதாரர் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதில் மனுதாரருக்கு வலது காலில் கடுமையான எலும்பு முறிவும், தலையில் பலத்த உள் அடியும், உடலெங்கும் பலத்த இரத்த காயங்களும் ஏற்பட்டதாகவும், உடனடியாக மனுதாரர் சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்பு மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மேற்படி விபத்தின் போது மனுதாரருக்கு வயது 58 மற்றும் மனுதாரர் கைத்தறி வைத்து பட்டு சேலைகள் நெய்து கடினமாக உழைத்து மாதம் ரூ.10,000/- சம்பாதித்து வந்தார். விபத்தினால் மனுதாரருக்கு முன்பு போல் தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை. ஆகவே, எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.8,00,000/- கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் மூலமாக முன்னிலையாகாததாலும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் அவர் இம்மனுவைப் பொறுத்த வரையில் தோன்றாத் தரப்பினரராக பாவிக்கப்பட்டார்.

4) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,</u>

1) இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?
2) மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார் ?
3) மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கத்தக்கது ?

5) மனுதாரர் ரங்கசாமி மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து குறித்த சங்கதிகளை நிரூபிக்க ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, ம.சா.1 ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மருத்துவ குழு மனுதாரருக்கு வழங்கிய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விபத்து வழக்கினை மகுடஞ்சாவடி காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.104/2013 ம.சா.ஆ.1 ஆகும். விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது.

6) <u>பிரச்சனை எண் 1 க்கான தீர்வு:</u>

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் ரங்கசாமி ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார்.

அவர் தனது சாட்சியத்தில் கடந்த 11.02.2013 ஆம் தேதியன்று காலை 10.00 மணியளவில் TN 28 X 8915 என்ற பதிவெண் கொண்ட TVS 50 என்ற இரு சக்கர வாகனத்தை தனது மகன் ஓட்ட, பின்னால் தான் அமர்ந்து கொண்டு, இளம்பிள்ளை - சின்னப்பம்பட்டி மெயின் ரோட்டில் பாப்பாபட்டி பெட்ரோல் பங்க் அருகே மேற்படி சாலையின் இடதுபுற ஓரமாக சாலை விதிகளை அனுசரித்து சென்றுக்கொண்டிருந்தபோது, தனக்கு பின்னால் அதே திசையில் வந்த TN 52 A 3055 என்ற பதிவெண் கொண்ட TVS Super XL வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தான் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், அதில் தனக்கு வலது காலில் கடுமையான எலும்பு முறிவும், தலையில் பலத்த உள் அடியும், உடலெங்கும் பலத்த இரத்த காயங்களும் ஏற்பட்டதாகவும், உடனடியாக தான் சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்பு மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாய்மொழி சாட்சியத்தை மறுத்துரைக்கும் விதமாக எதிர்மனுதாரர் தரப்பில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியங்களோ அல்லது ஆவண சாட்சியங்களோ முன்னிலைப் படுத்தபடவில்லை. எதிர்மனுதாரர் தீர்ப்பாயத்தில் ஆஜராகாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினரராக இருந்து வருகிறார். ம.சா.1 ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கை, ம.சா.ஆ.3 குற்ற அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த வழக்கில் விபத்திற்கு எதிர்மனுதாரரின் கவனக்குறைவு தான் காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7) <u>பிரச்சனை எண் 2 க்கான தீர்வு:</u>

விபத்திற்கு காரணம் எதிர்மனுதாரர் தான் என்று தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், இம்மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எதிர்மனுதாரருக்கு உள்ளதா என்பது குறித்த நாம் இங்கு பரிசீலிக்க வேண்டியுள்ளது. சம்பவத்திற்கு காரணமான TN 52 A 3055 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் மூலம் தெரிய வருகின்றது. மேலும், அந்த வாகனம் விபத்து காப்பீடு செய்யப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. இந்த விபத்திற்கு எதிர்மனுதாரரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதால் அந்த வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில் எதிர்மனுதாரர்தான் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் என்று இப்பிரச்சனைக்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காணப்படுகிறது.

8) <u>பிரச்சனை எண் 3 க்கான தீர்வு:</u>

இந்த மனுவில் மனுதாரர் ரங்கசாமி தனக்கு ஏற்பட்ட காயங்களை மெய்பிக்க ம.சா.1

ஆக விசாரித்துக் கொண்டதோடு, மேற்படி வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்திலிருந்து மனுதாரருக்கு வலது காலில் கடுமையான எலும்பு முறிவும், தலையில் பலத்த உள் அடியும், உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர் மருத்துவ குழுமத்திற்கு முன்பு ஆஜராகி பெற்ற ஊன சான்றானது இந்த தீர்ப்பாயத்தில் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஊன சான்றில் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவு 20% எனவும், அது நிரந்தர ஊனம் எனவும் சான்று வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2020 (1) TN MAC Page 617 “M.Chinathambi – Vs – S.Deepa (2) National Insurance co., Ltd., Namakkal” எனும் வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் படி 2015 க்கு முன்பு ஏற்பட்ட விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.3,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரருக்கு ஊன சதவிகிதமாக 20% நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கூறிய மொழிந்துரையின் படி (20 x ரூ.3,000/-) ரூ.60,000/- மனுதாரருக்கு காயத்திற்கான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

9) மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் அவர் வாழ்நாள் முழுவதும் சிரமத்தை அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளதால், அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ. 20,000/- நியாயமான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

10) மனுதாரர் விபத்தின் போது கைத்தறி வைத்து பட்டு சேலைகள் நெய்து கடினமாக உழைத்து மாதம் ரூ.10,000/- சம்பாதித்து வந்ததாக சொல்லியிருந்தாலும், அதனை மெய்பிக்க தேவையான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய தவறியுள்ளதால், மனுதாரரின் வயது மற்றும் தொழில் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மனுதாரர் மாதம் ரூ.6,000/- வருமானம் ஈட்டியிருக்க கூடும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது. மனுதாரர் தனக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தின் காரணமாக மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்திருந்ததால், அவர் சுமார் 3 மாதங்கள் வேலைக்கு சென்றிருக்க இயலாது. எனவே, விபத்து சமயத்தில் அவர் வேலை செய்யாததற்கு ஏற்பட்ட வருமான இழப்பீடாக 3 x ரூ.6,000/- = ரூ.18,000/-கொடுக்கலாம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

11) மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயம் ஏற்பட்டதால், சிகிச்சைக்காக மருத்துவமனை சென்று, வர ஏற்பட்ட போக்குவரத்து செலவினத்திற்காக ரூ.20,000/- இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது.

12) மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு

எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.10,000/- இழப்பீடு பெற அருகதையுடையவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

13) மனுதாரர் சிகிச்சையின் போது மருத்துவ செலவினத்திற்கென ரூ.1,24,357/- செலவழித்து உள்ளதாக ம.சா.ஆ.4 மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவ செலவினத்திற்கென ரூ.1,24,357/- கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

14) ஆகவே, மேற்படி பரிசீலினையின் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

**கணக்கீடு**

| | | |
|---|---|---|
| ஊனத்திற்கான இழப்பீடு | | ரூ. 60,000.00 |
| வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | | ரூ. 20,000.00 |
| வருமான இழப்பு | | ரூ. 18,000.00 |
| போக்குவரத்து செலவினம் | | ரூ. 20,000.00 |
| ஊட்டச்சத்து | | ரூ. 10,000.00 |
| மருத்துவ செலவினம் | | ரூ. 1,24,357.00 |
| | மொத்தம் | ரூ. 2,52,357.00 |

15) எனவே, மனுதாரருக்கு மேற்கண்டவாறு ரூ.2,52,357/- மட்டும் இழப்பீடாக பெற உரிமையுடையவர் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

16) இறுதியாக,

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,

2. ரூ.2,52,357/-(ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்திரண்டு ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஏழு மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக எதிர்மனுதாரர் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,

3. மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. இந்த இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் 7.5% வட்டி செலுத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றம், கணக்கு எண் : 42830274259, IFSC எண் SBIN0000994 என்ற

வங்கி கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடி வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டுமென்றும்,

5. எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தவுடன், இழப்பீட்டு தொகை முழுவதையும் வட்டியுடன் மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கியும்,

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.8,047/- நிர்ணயிக்கப்பட்டும்,

7. இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.10/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடைமனு எண் 2176/2013 தாக்கல் செய்து உத்தரவு நாள் 24.09.2013 ன் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.1,886/-ஐ மனுதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்,

8. மாண்புமிகு சென்னை,உயர்நீதிமன்ற உத்தரவு எண். C.R.P No. 1343 of 2012 நாள்:02.04.2016 MD TSTC Salem Ltd., /Vs/ Chinnadurai என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின் படி எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.04.30 14:49:50 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

<u>மற்ற விபரங்கள்</u>

| | |
|---|---|
| மனு தாக்கலான தேதி | 24.09.2013 |
| உத்தரவு நாள் | 30.04.2026 |
| இழப்பீட்டுத்தொகை | ரூ.2,52,357/-(ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்திரண்டு ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஏழு மட்டும்) |
| வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம் | மனு தேதியான 24.09.2013 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் |

| | |
|---|---|
| | செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ.1,896/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | ரூ.20/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.1,886/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம் | மனுதாரர் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.1,886/-ஐ உத்தரவு தேதியான 30.04.2026 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் |
| அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை | ரூ.10,198/- |
| மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா | இல்லை |

<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>

| மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 1896 | 00 |
| வக்காலத்து கட்டணம் | 5 | 00 |
| சான்றாவண கட்டணம் | 15 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 8047 | 00 |
| கட்டளை சார்வு கட்டணம் | 35 | 00 |
| எழுத்துக்கூலி | 200 | 00 |
| மொத்தம் | 10198 | 00 |

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.10,198/-ஐ எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.04.30 14:50:00 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

<u>இணைப்பு:-</u>

(1) <u>மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல்</u>-

ம.சா.1 .. திரு.ரங்கசாமி (மனுதாரர்)

(2) <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல்</u> - இல்லை

(3) மனுதாரர் தரப்பு சான்றாவணப்பட்டியல் -

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 .. | முதல் தகவல் அறிக்கை | - உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 .. | TN 52 A 3035 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை | - உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 .. | குற்ற இறுதி அறிக்கை | - உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 .. | மருத்துவ மெடிக்கல் பில்கள் | - அசல் |

(4) எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணப்பட்டியல் - இல்லை

(5) சாட்சிகள் தரப்பு சான்றாவணப்பட்டியல் - இல்லை

(6) நீதிமன்ற தரப்பு சான்றாவணப்பட்டியல் -

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | ஊன சான்று | -அசல் |

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.04.30 14:50:09 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

குறிப்பு:-

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.